
# தமிழ்நாடும் - தந்தை பெரியாரும்



பேரா. முனைவர். **ப.காளிமுத்து,** எம்.ஏ., பிஎச்.டி.

**கட்டுரைச்சுருக்கம்:**

'தமிழ்நாடு' என்ற ஒற்றைத் தலைமையின் பெயரால், தமிழகமும் தமிழர்களும் வரலாற்றில் ஒன்றுபட்டிருந்தமைக்கான சான்றுகள் கிட்டவில்லை என்பதைக் கவனத்தில் கொண்டு, தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்படும் வரையில் நடந்த நிகழ்வுகளை இக்கட்டுரை ஆராய்கின்றது. 1918இல் வெளியிடப்பட்ட மாண்டேகு செம்சுபோர்டு குழு அறிக்கையில் தொடங்கி, தமிழ்நாடு எத்தகையது, அதன் எல்லைப்பரப்பு என்ன, போன்றனவெல்லாம் பெரியார் அன்றே வரையறை செய்ததை நோக்கி, 'தமிழ்நாடு' என்ற சொல்லாட்சியை, மக்கள் உள்ளங்களில் வேரூன்ற வைத்தவர் தந்தை பெரியார் என்பதனை இக்கட்டுரை நிறுவுகிறது.

தமிழ்நாடு எனும் பெயர் தொல்காப்பியத்தில் உள்ளதா என வினா எழுப்பி, சிலப்பதிகாரத்தில் 'தமிழ்நாடு' எனும் சொல்லாட்சியை இக்கட்டுரை பதிவு செய்கிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரையிலான இலக்கியங்களில் 'தமிழ்நாடு' எனும் சொல்லாட்சியை இக்கட்டுரை தேடுகின்றது.

பெரியார் தொடர்ச்சியாகத் தமிழ்நாடு என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியதையும், அவர் முன்வைத்த 'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் முழக்கத்தையும், அக்கோரிக்கைக்குப் பெரியார் முன்வைத்த காரணங்களையும் 'குடிஅரசு' இதழாவணங்கள் மூலமாக வகைப்படுத்துகிறது. 'தமிழ்நாடு தமிழருக்கே' எனும் முழக்கத்தை எதிர்த்தவர்களை அடையாளம் காட்டும் இக்கட்டுரை, தமிழ்நாட்டிற்குச் 'சென்னை நாடு' என்று பெயர்வைக்க முயற்சி நடந்ததையும், அதனைப் பெரியார் கடுமையாக எதிர்த்ததையும் பதிவு செய்கிறது. தமிழ்நாடு எனும் பெயர் மாற்றத்திற்காக அறிஞர் அண்ணா, பூபேஷ் குப்தா போன்றவர்கள் இந்திய நாடாளுமன்றத்தில் பதிவு செய்த கருத்துக்களையும் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. சங்கரலிங்கனார் உயிர்த் தியாகம் போன்ற வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டு, காமராசர் காலத்தில் தமிழ்நாடு பெயர் மாற்றம் நிகழாதது ஏன், என வினவி விடைதேடுகிறது. அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி ஏற்றவுடன் நடைபெற்ற 'தமிழ்நாடு' பெயர்மாற்ற நிகழ்வை ஆய்வு செய்து, முடிவுகளைத் தொகுத்து வழங்குகின்றது.

தமிழ்நாடு என்ற ஒற்றைத் தலைமையின் பெயரால் தமிழகமும் தமிழர்களும் வரலாற்றில் ஒன்று பட்டிருந்தமைக்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை. இந்நிலையில் தமிழகத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப் பெறும் வரையில் நடந்த நிகழ்வுகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

இந்தியப் பெருநிலப்பரப்பை ஆங்கிலேயர்கள் கையகப்படுத்தி ஆண்ட காலத்தில் அவர்தம்

ஆட்சி முறைச் செயல்பாடுகளுக்கு ஏதுவாகச் சில பிரிவுகளாகப் பிரித்து ஆட்சி செய்ய விரும்பினர். காலப் போக்கில் இப்பிரிவினைகள் பயன் தரவில்லை என்பதை அவர்கள் உணரத் தொடங்கினர்.

இந்திய நிலப்பரப்பின் அரசியல் சூழலில் 1918ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மாண்டேகு – செம்சுஃபோர்டு அறிக்கை, மொழிகளின் இன்றியமையாமையை வற்புறுத்துகிறது. செயற்கையானதும் அரசின் செயல்பாடுகளுக்கு ஏதுவாக இல்லாததுமாகிய தன்மைகளைக் கொண்ட – அப்போதிருந்த மாநிலப் பிரிவினைகளைப் பற்றி அந்த அறிக்கை ஆராய்கிறது; மாண்டேகு செம்சுஃபோர்டு அறிக்கையின் பரிந்துரைகள் நன்முறையில் வலிமையாகச் செயல்படுத்தப்படுவதற்கு இந்திய மாநிலங்கள் மொழி அடிப்படையிலோ, இன அடிப்படையிலோ இந்திய அரசின் மாநிலங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை பரிந்துரைத்தது!

மாண்டேகு-செம்சுஃபோர்டு குழுவின் பரிந்துரைகள் நடைமுறைக்கு வரும் நேரத்தில் இந்திய – தேசிய காங்கிரசு கட்சியும் மொழி அடிப்படையில் தன் கட்சியைப் பிரிக்க முடிவு செய்தது. அதன்படிக் காங்கிரசு கட்சி ஒரே இனவகையைச் சேர்ந்த 21 மாநிலக் கிளைகளை உள்ளடக்கிய கட்சியாக மாற்றி அமைக்கப்பட்டது. சென்னை மாநிலக் காங்கிரசு கமிட்டி (Madras Presidency) நான்காகப் பிரிக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி ஆந்திர காங்கிரசு கமிட்டி, கர்நாடக காங்கிரசு கமிட்டி, கேரள காங்கிரசு கமிட்டி, தமிழ்நாடு காங்கிரசு கமிட்டி என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இதனால் காங்கிரசுக் கட்சிதான் முதன்முதலில் தமிழ்நாடு (Tamilnad) என்று மொழியின் பெயரால் தன் அரசியல் அமைப்பிற்குப் பெயர் கொடுத்தது என்று ஆய்வாளர் கருதுவர்.[1] காங்கிரசார் தமிழ்நாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் கொண்ட பற்றின் காரணமாக அவர்கள் தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டிக் கொள்ளவில்லை. கர்நாடகம், ஆந்திரம், கேரளம் எனத் தென்னகக் காங்கிரசுக் கட்சி பிரித்து அமைக்கப்பட்ட நிலையில் தனித்து விடப்பட்டு வேறு வழியில்லாமற் போனதால், தமிழ்நாடு காங்கிரசு கமிட்டி என்ற பெயர், தானே வந்து அவர்கள் மீது வலிய விழுந்தது. மேலும் அப்போது காங்கிரசில் பார்ப்பனர் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது என்பதனால் அவர்கள் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு ஒருபோதும் ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்கள். 1967இல் தி.மு.கழகம் ஆட்சியைக் கைப்பற்றி 1967 ஜூலை 18ஆம் நாள் அறிஞர் அண்ணா தமிழ்நாடு என்ற பெயர் சூட்டும் வரை[2] தமிழ்நாடு என்ற பெயரைக் காங்கிரசார் எதிர்த்தே வந்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று காங்கிரசார் கூறும்போதெல்லாம் தமிழ்நாடு என்பதை எந்திர மயமாகவே – உணர்ச்சியற்ற சொல்லாக ஒரு வெற்றொலியைப் போல அதனை உச்சரித்தார்கள். ஆனால், அறிஞர் அண்ணாவும் தந்தை பெரியாரும் தமிழ்நாடு என்பதனை ஓர் உயிரோட்டமுள்ள சொல்லாக – உணர்ச்சி மிகுந்த சொல்லாட்சியாக மாற்றி அதற்குப் புத்துணர்ச்சி ஊட்டினார்கள். தென்திசையைப் பார்க்கின்றேன் என் சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்குதடடா[3] என்ற புரட்சிக்கவிஞரின கவிதையைப் படிக்கும்போது ஏற்படுகின்ற உணர்ச்சி அது!

தமது நாடு எது? தமது மொழி, இனம் எது? என்று தெரியாமல் கல்லாமையிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடந்த மக்களைத் தமிழ்நாடு என்ற இந்த ஒற்றைச் சொல்லால் உயிர்த்தெழச் செய்ய முடியும் என்று பெரியார் உறுதியாக நம்பினார். அதனால் வாய்ப்பு நேரும் போதெல்லாம் தமிழ்நாடு என்ற சொல்லாட்சியை மக்கள் உள்ளங்களில் ஆழமாக வேரூன்ற வைத்தார். அவர் ஊன்றிய அந்த உணர்ச்சி முளைத்துச் செழித்து வளர்ந்து அவர் காலத்திலேயே பயன் தந்ததைப் பார்த்து மகிழ்ந்தார் பெரியார்.

சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகளாகத் தமிழ்நாடு, சென்னை ராஜ்ஜியம் என்ற பெயரைச் சுமந்து கொண்டிருந்தது. இதனை மாற்றக் கருதிய பெரியார், முதலில் தமிழ்நாடு என்ற பெயரை மக்கள் வழக்காற்றில் கொண்டுவர வேண்டும் என்று விரும்பினார்.[4] அதற்காக வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் தமிழ்நாடு என்ற சொல்லாட்சியைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தினார்.

1916ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் டாக்டர் நடேசனாரும் டாக்டர் டி.எம்.நாயரும் சர்.பிட்டி தியாகராயரும் இணைந்து தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் **(South Indian Liberal Federation)** என்ற அரசியல் அமைப்பைத் தொடங்கினார்கள். பின்னர் இந்த அமைப்பு அவர்கள் தொடங்கி நடத்திய என்ற இதழின் பெயரால் நீதிக்கட்சி என அழைக்கப்படலாயிற்று. தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் **(SILF)**, 1917 ஆண்டில் என்.பக்தவத்சலம் பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு திராவிடன் என்னும் தமிழ் நாளிதழைத் தொடங்கியது.[5] இந்த இதழின் பத்தாவது ஆண்டில், விற்பனை சரிந்து இதழ் நின்றுவிடும் நிலைக்கு வந்துவிட்டது. இதனை அறிந்த பெரியார் பெரிதும் வருந்திப் பின்வருமாறு எழுதுகிறார்:-

தமிழ்நாடு என்பதாக 10 ஜில்லாக்கள் கொண்ட ஒரு நாடு, தமிழ் மக்கள் அதாவது பார்ப்பனர் அல்லாதார் என்பதாக 2 கோடி மக்களைக் கொண்ட ஒரு சமூகம், தங்கள் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் விடுதலைக்கும் என்பதாக ஏற்பட்ட ஒரு தமிழ் தினசரி பத்திரிகையை நடத்த முடியாமல் விட்டு விடுவதென்றால் நமது சமூகத்தின் தாழ்ந்த நிலையைக் காட்ட இதைவிட வேறு ஆதாரம் வேண்டியதில்லையென்றே சொல்லுவோம்.[6]

தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் விடுதலைக்கும் பாடுபட்ட திராவிடன் என்று நீதிக்கட்சியின் இதழைப் பற்றிப் பெரியார் குறிப்பிடுவதை இங்கு நாம் உற்று நோக்க வேண்டும். திராவிடன் இதழ் ஆற்றி வந்த அரும்பணியைக் குறிப்பிட்டு, அவ்விதழ் தொடர்ந்து வெளிவருவதற்குத் தமிழ்நாட்டு மக்கள் துணை நிற்க வேண்டும் என்று பெரியார் உளமார விரும்பி வேண்டுகிறார்.

தமிழ்நாடு எத்தகையது? (அப்போது) அது பத்து மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது. மக்கள் தொகையோ இரண்டு கோடிப் பேர்! அதுவும் பார்ப்பனரல்லாத மக்களாக இரண்டு கோடிப் பேர் வாழ்கிறார்கள்! என்று எல்லை வரையறை செய்து தமிழ்நாட்டைப் பற்றிய ஓர் உருக்காட்சியை நம் உள்ளத்தில் தோற்றுவிக்கிறார் பெரியார். ஏனென்றால் மக்கள் நெஞ்சில் தமிழ்நாடு என்ற சொல்லாட்சியை நிலைபெறச் செய்ய வேண்டும் என்பது பெரியாரின் உள்ளார்ந்த விருப்பமாகும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக - ஏன் அதற்கு முற்பட்ட காலத்திலும் கூட, தமிழ்நாடு என்ற சொல்லாட்சியைத் தமிழ் மக்கள் கேட்டிலர். கி.மு.பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் நமக்குக் கிடைத்திருக்கும் முதல் நூலாகிய தொல்காப்பியத்தில்கூட, தமிழ்நாடு என்ற சொல்லைக் காணமுடியவில்லை. தொல்காப்பியத்தின் பாயிரத்தில் பனம்பாரனார் தொல்காப்பியரை அறிமுகம் செய்யும் இடத்தில்,

**வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ் கூறும் நல் உலகத்து**
**வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்**
**எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்**
**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தோடு**
**முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலந்தொகுத்தோனே...**[7]

என்று குறிப்பிடுகிறார். தமிழகத்தின் எல்லைகளை வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்உலகம் என்று வரையறை செய்யும் பனம்பாரனார், தமிழ் நாட்டின் பெயரைச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் என்றே சுட்டுகிறார். இங்கும் தமிழ்நாடு என்ற பெயர் இல்லை. தமிழ்கூறும் நல்உலகம் என்ற தொடரையும் பனம்பாரனார் இங்கே பயன்படுத்துவதைக் காணலாம்.

பிறிதோரிடத்தில் தமிழ் இலக்கிய வகைமை பற்றிக் கூறவந்த தொல்காப்பியர்,

**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்**
**நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்**
**யாப்பின் வழியது என்மனார் புலவர்**[8]

என்று தமிழ்நாட்டிற்குரிய எல்லைகளைச் சுட்டுகிறார். மேலும் தமிழ் அரசர்களின் அடையாளப் பூக்களைக் குறிக்குமிடத்திலும்,

**போந்தை வேம்பே ஆர்எனவரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்தபூவும்**[9]

என்று தொல்காப்பியர் கூறிச் செல்வதைக் காண்கிறோம். இங்கெல்லாம் தமிழ்நாடு என்ற சொல்லாட்சி இடம் பெறாமையைக் காண்கிறோம்.

தொல்காப்பியருக்குப் பின் தோன்றிய சங்க இலக்கியங்களிலும் தமிழ்நாட்டைக் காண முடியவில்லை. கருவூர்க் கதப் பிள்ளைச் சாத்தனார் பாடிய புறப்பாடலில்,

**கைவல் ஈகைக் கடுமான் கொற்ற**
**வையக வரைப்பில் தமிழகம் கேட்ப** என்றும்,

பதிற்றுப்பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை ஆசிரியர் குமட்டூர்க் கண்ணனார் இரண்டாம் பத்தின் பதிகத்தில்,

**அமைவரல் அருவி இமையம் விற்பொறித்து**
**இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க**[11]

என்றும் தமிழகம் என்ற பெயரே தமிழ்நாட்டைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் எல்லை இமிழ்கடல் வேலித் தமிழகம் என்ற தொடரில் சுட்டப்படுகிறது.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் தமிழ்நாடு என்ற சொல்லாட்சி இடம்பெறுவதைக் காண்கிறோம்.

**வட வாரியர் படை கடந்து**
**தென்தமிழ்நாடு ஒருங்கு காண்**[12] என்றும்,

**இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடாக்கிய**
**இது நீ கருதினை ஆயின்...**[13] என்றும்,

**தென்தமிழ் நாடாளும் வேந்தர்**
**செருவேட்டுப் புகன்றெழுந்து**
**மின்தவழும் இமய நெற்றியில்**
**விளங்கு வில் புலி கயல் பொறித்த நாள்...**[14]

என்றும் சிலப்பதிகாரத்தில் தமிழ்நாடு என்ற சொல்லாட்சிபலஇடங்களில்பயின்றுவரக்காண்கிறோம்.

இடைக்காலத்தில் சில நூல்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழ்நாடு என்ற சொல்லாட்சி இடம் பெற்ற போதிலும் மக்கள் வழக்காற்றில் இதனைக் காண இயலவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழ் மன்னர்கள் வீழ்ச்சியடைந்தனர். வேதியர் சூழ்ச்சியால் வேள்விகள் செய்து அரசின் கருவூலத்தைக் கரைத்தார்கள். புனல் பரந்து பொன் கொழித்த நிலங்கள், பூணூல்களுக்குப் பரிசளிக்கப்பட்டன. வரலாறு மாறிப் பேயிற்று. ஆரிய மொழியான சமற்கிருதம் ஆதிக்கம் செலுத்தியது. மக்கள் வழக்காற்றில் மட்டுமே தமிழ் இருந்தது. தமிழகம் என்றோ தமிழ்மொழி தாய்மொழி என்றோ எந்த உணர்வும் இல்லாமல் தமிழ் மக்கள் தங்கள் அன்றாட வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலை இருபதாம் நூற்றாண்டு வரை நீடித்தது.

தம் (சுய) நினைவின்றி வாழ்ந்த மக்களுக்கு அவர்தம் இனப் பெயரை எடுத்துச் சொல்லி, தாய்மொழி உணர்ச்சியூட்டி, தாய்நாடு தமிழ்நாடு என்று ஊர்தோறும் முழங்கி மக்கள் நெஞ்சில் தமிழ்நாட்டைப் பதியவைத்த பெருமை பெரியாரையே சாரும். மக்கள் மொழியில், எளிய நடையில் அவர் பேசியமையால் அவர்தம் கருத்துக்கள் மக்கள் நெஞ்சில் ஆழப் பதிந்தன.

20.3.1927ஆம் நாளிட்ட குடிஅரசு ஏட்டில் வெளியான பெரியாரின் சொற்பொழிவிலும், 10.04.1927ஆம் நாளிட்ட குடிஅரசு இதழிலும் தமிழ்நாடு என்ற சொல்லாட்சியைத் தொடர்ந்து பெரியார் பயன்படுத்துகிறார். தமிழ்நாடு என்பதைப் பற்றி எவரும் சிந்திக்காத காலத்தில் பெரியார் தொலைநோக்குப் பார்வையோடு இந்தச் சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளமையை நாம் உற்று நோக்க வேண்டும்.[15] தமிழ்நாடு என்ற சொல்லாட்சியைக் கேட்டதும் மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுவதைப் பெரியாரும் அவர் உருவாக்கிய தலைவர்களும் உணர்ந்து மகிழ்ச்சியடைந்தனர்.

டாக்டர் வரதராசுலு நாயுடு பெரியாரின் மிக நெருங்கிய நண்பர். 17.4.1927இல் தமிழ்நாடு எனும் பெயரில் தாளிகை ஒன்றை நாயுடு தொடங்கினார்.

தமிழ்நாடு எனும் இப்பெயர் பெரியாரின் தாக்குரவால் வைக்கப்பட்ட பெயர் என்பது வெளிப்படையாகும்.

1936ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் நீதிக்கட்சி தோல்வி அடைந்தது. காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்றது. அக் கட்சி பார்ப்பனர்களின் கோட்டையாக விளங்கியது. இதனால் அரசு அதிகாரத்தைப் பார்ப்பனர்கள் கைப்பற்றி விடுவார்கள்; ஆரியம் அரியணை ஏறிவிடும் என்று பார்ப்பனரல்லாத மக்களின் தலைவர்கள் கருதினார்கள். அவர்கள் கருதியதைப் போலவே இராஜகோபால் ஆச்சாரியார் தலைமையில் காங்கிரசுக் கட்சி ஆட்சி அமைத்தது. ஆச்சாரியார் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கித் தமிழ் மக்களைப் போராட வைத்துவிட்டார்.

இந்தி ஆரிய மொழி என்றும், அதைக் கட்டாயமாக்கித் திணிக்க நினைப்பது - ஆரியப் பண்பாட்டை - பார்ப்பனப் பண்பாட்டைத் தமிழ் மக்களின் மீது திணிக்கும் முயற்சி என்றும், இதனால் தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் சிதைவுறும் என்றும் பெரியார் மக்களுக்கு எடுத்துக் கூறினார். மேலும் தமிழர்களின் உரிமைகள் அனைத்தும் பறிபோய்விடும் என்றும் பெரியார் கருதினார்.

1937ஆம் ஆண்டு வரை காங்கிரசில் இருந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் இந்தி எதிர்ப்பில் பெரியாரோடு தன்னை இணைத்துக் கொண்டார். இந்தி, தமிழ்ப் பண்பாட்டிற்குக் கேடு விளைவிக்கும்; இந்தி ஆதிக்கத்திலிருந்து நாம் விடுதலை பெற வேண்டுமானால் தமிழ் மக்களுக்காகத் தனி மாநிலம் - தமிழ் மாநிலம் என ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று நாவலர் குரல் கொடுத்தார்.[16]

ஆனால், பெரியார் தமிழ்நாட்டின் விடுதலையை முன்வைத்தார். இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பது என்பது மறைமுகமாகச் சமற்கிருதத்தைத் திணிக்கும் முயற்சி என்றும் இது திராவிட மக்கள் மீது ஆரியர்கள் நடத்தும் பண்பாட்டுப் படையெடுப்பு என்றும் பெரியார் கருதினார். ஆதலின் இந்த முயற்சிகளை முறியடிக்க வேண்டுமானால் தமிழ்நாடு தமிழருக்கே என்றாக வேண்டும் என்று பெரியார் கருதினார்.

தமிழ்நாட்டின் செல்வம் கொள்ளையடிக்கப்படுகிறது; வளம் சுரண்டப்படுகிறது. தமிழர் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு, தமிழ்மொழி ஆகியவை அனைத்தும் இந்தியாலும் சமற்கிருதத்தாலும் சிதைக்கப்பட்டுச் சீரழிக்கப்படும் நிலை உருவானது. தமிழ் மக்களிடையே வடவாரியர் நூல்களில் மலிந்து கிடக்கின்ற மூடநம்பிக்கைகளைப் பரப்பினார்கள். மக்கள் சிந்திக்கும் திறன் இழந்து வறுமைவாய்ப்பட்டுத் துன்பத்தில் உழன்றனர். இத்தகைய சூழ்நிலையில் ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தமிழ்நாடு தமிழருக்கே என்ற விடுதலை முழக்கத்தை மக்கள் முன் வைத்தார் பெரியார்.

மறுபுறத்தில் பார்ப்பனமயமாக இருந்த இந்திய தேசிய காங்கிரசு, குஜராத் பிரிவினையை, ஆந்திர மாநிலப் பிரிவினையை ஆதரித்தது. ஆனால், தமிழ் மாநிலம் என்ற கோரிக்கையைக் கூடக் காங்கிரசார் ஏற்கவில்லை. தேசியம் என்ற பெயரால் தமிழ் மக்கள் சுரண்டப்படுவதைப் பெரியார் அம்பலப்படுத்தினார்.[17]

மதத்தின் பெயராலும் புனித நூல்களின் பெயராலும் தமிழ் மக்கள் அடிமைகளாக்கப்படுவதைப்பெரியார் ஒருபோதும் ஏற்கவில்லை. அவர் காங்கிரசில் தலைவராக இருந்த காலத்திலேயே இராமாயணத்தையும் மனுதர்மத்தையும் நெருப்பிட்டுக் கொளுத்த வேண்டும் என்று காங்கிரசு மாநாட்டிலேயே முழக்கமிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.[18]

காங்கிரசார் தமிழ் மாநிலம் என்ற ஒரு மாநிலப் பிரிவினையைக் கூட ஏற்றுக் கொள்ளாமற் போனது பெரியாருக்குக் கடுஞ்சினத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். தக்க சூழ்நிலையை எதிர்பார்த்திருந்தார் பெரியார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று அவர்கள் பெயர் வைத்திருந்ததைக் கூடப் பெரியார் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார். என்றாலும் காங்கிரசார் ஒத்துவரவில்லை.

இராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சர் ஆனவுடன் கட்டாய இந்தியைப் பள்ளிகளில் புகுத்தியதை எதிர்த்து 1937இல் காஞ்சியில்

இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்திய பெரியார், தமிழகம் இந்தியை எதிர்த்துக் களம் காண்பதற்கு வழிவகுத்தார். திருச்சியிலிருந்து இந்தியை எதிர்த்துத் தமிழர் பெரும்படை ஒன்று சென்னை நோக்கிப் புறப்பட்டது. (1.8.1938) இப் படைக்கு வரவேற்பளிக்க - சென்னைக் கடற்கரையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்திற்குச் சென்னைக் கடற்கரை என்றும் கண்டிராத அளவு சுமார் 70,000 பேர் கூடினார்கள். அக் கூட்டத்தில் பேசும்போதுதான் பெரியார் தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தை முன்வைத்து முதன்முதலில் அதனை விளக்கிப் பேசினார். அன்று முதல் அதுவே தமிழரின் கொள்கையாகவும் நீதிக்கட்சியின் கொள்கையாகவும் ஆயிற்று.[19]

இதனால் தமிழ்நாடு என்ற பெயர், பெரியாரின் நெஞ்சில் ஆழமாக வேரூன்றியிருந்த பெயராக விளங்கிற்று என்பது வெளிப்படை! பெரியாரின் உள்ளத்தில் அடக்கி வைக்கப்பட்டிருந்த உரிமை உணர்ச்சி அணை உடைத்துப் பாய்ந்த வெள்ளத்தைப் போலப் பீறிட்டுக் கிளம்பியதைத் தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கம் வெளிப்படுத்திக் காட்டுகிறது. தமிழ்நாடு தமிழருக்கே என்று, கடற்கரையில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான தமிழர் முழங்கியதைக் கேட்ட பெரியார் பெரிதும் மகிழ்ந்திருப்பார் என்பதில் அய்யமிருக்க முடியாது.

தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தைப் பெரியார் முன்வைத்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. இதனை அவரே குடிஅரசு ஏட்டில் எழுதுகிறார்.

தமிழ்நாட்டுத் தொழில் முறைகள் தமிழனுக்குப் பயன்படவில்லை; இரும்புத் தொழிலில் பம்பாய்க்காரர்; பாரசீகக்காரர்கள் உரிமை பெற்றுப் பயனடைகிறார்கள். உலோகத் தொழிலையும் பம்பாய்க்காரர், ஷோலாபூர்க்காரர் உரிமையாக்கிப் பயனடைகிறார்கள்; துணித் தொழிலைப் பம்பாய் ஆமதாபாத்காரர்கள் கைப்பற்றிப் பயனடைகிறார்கள்; தமிழ்த் தொழிலாளிக்கு இங்கு வேலையில்லை; லேவாதேவித் தொழிலை எடுத்துக்கொண்டால் அவை பெரிதும் மார்வாரி நாட்டானும், குஜராத்தி நாட்டானுமே ஏகபோக உரிமையாக்கி அவர்கள் கொண்டு போகும் செல்வம் கொஞ்சமா? அவை எப்படிப் போகின்றன என்பதைப் பார்த்தால், தமிழ்க் கூலிகள், தொழிலாளர்கள், ஏழைகள் ஆகியவர்களின் செல்வத்தைக் கையைத் திருகிக் கொண்டு போவதுபோல் மார்வாரிகள் கொண்டு போகிறார்கள். இவ்வாறு ஏமாற்றி வஞ்சித்துத் தேடும் செல்வம் அத்தனையும் பகற்கொள்ளை - வட்டிக் கொள்ளை என்று சொல்லப்படுவதுபோல், கோடி கோடியாய்ச் சிந்து மாகாணத்திற்கு வட்டியின் பேரால் கடத்திச் செல்லப்படுகிறது. அதன் பயனாகத் தமிழ்நாட்டில் உள்ள பெரும் பெரும் வர்த்தகர்கள் மிக மோசமான நிலைக்கு வந்து விட்டார்கள். மணல்வீடு கட்டிச் சரிந்து மட்டமாவது போல் தமிழ் வியாபாரிகள் தினம் தினம் கடன்காரராகி - பாப்பராகி - இன்சால்வென்டாகித் தற்கொலை செய்து கொள்வதும் நாட்டை விட்டு ஓடுவதுமான நிலையில் இருந்து வருகிறார்கள்.

அரசியல் துறையிலும் நாம் (தமிழன்) வேறு நாட்டானுக்கே அடிமையாய் இருக்க வேண்டுமானால் - அது மேல் நாட்டானுக்கு அடிமையானால் என்ன? வடநாட்டானுக்கு அடிமையானால் என்ன?

தமிழனின் செல்வம் தானாகட்டும் தமிழ்நாட்டை விட்டுக் கடத்தித்தான் ஆக வேண்டுமானால் அது மேல் நாட்டுக்குப் போனால் என்ன? வடநாட்டுக்குப் போனால் என்ன?

எனவே தோழர்களே! உதைக்கும் காலுக்கு இதுவரை முத்தமிட்டுப் பூசை செய்கிறோம்! மலத்தை மனமார முகருகிறோம்; மானமிழந்தோம்; பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியை இழந்தோம். மாற்றானுக்கு அடிமையாகி வணங்குகிறோம். இதற்குத் தானா தமிழன் உயிர் வாழ வேண்டும்? எழுங்கள்! நம்மை ஏய்த்து அழுத்தி நம் தலைமேல் கால்வைத்து ஏறி மேலே போக - வடநாட்டானுக்கும் தமிழனல்லாதவனுக்கும் நாம் படிக்கல் ஆகிவிட்டோம்.

இனியாவது தமிழ்நாடு தமிழருக்கே என்று ஆரவாரம் செய்யுங்கள்.

உங்கள் கைகளில், தமிழ்நாடு தமிழருக்கே என்று பச்சை குத்திக் கொள்ளுங்கள்!

உங்கள் வீடுதோறும் தமிழ்நாடு தமிழருக்கே என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள்!

தமிழ்நாடு தமிழருக்கே![20]

இத்தகைய விடுதலைப் போர் முழக்கத்தைக் கேட்டதும் தேசியவாதிகள் அதிர்ச்சியடைந்து போனார்கள். ஆனால், சுயமரியாதை இயக்கத் தொண்டர்களும் நீதிக்கட்சித் தலைவர்களும் தமிழ் ஆர்வலர்களும் அகமகிழ்ந்து பெரியாரைப் போற்றிக் கொண்டாடினார்கள்.

தமிழ்நாடு தமிழருக்கே என்று பச்சை குத்திக் கொள்ளுங்கள் என்னும் பெரியாரின் கருத்து என்றும் நிலைத்து நிற்பது. அதனை நோக்கும் ஒவ்வோர் இமைப்போதும் தமிழ்நாடு தமிழருக்கே என்னும் அந்த உரிமைக்குரல் நினைவில் வந்து கொண்டேயிருக்கும். அதைப் போலவே, இந்த முழக்கத்தை வீடுகள் தோறும் எழுதிப் பதிவு செய்யுங்கள் என்பதும் அப்படித்தான். இந்த இரண்டு தொடர்களும் ஆய்வாளர்களின் கவனத்திற்குரியனவாகின்றன.

பிற்காலத்தில் அரசியல் தலைவர் (முதலமைச்சர்) ஒருவர், தன் கட்சிக் கொடியைக் கையில் பச்சை குத்திக் கொள்ளுங்கள்; வாசல்தோறும் கட்சிச் சின்னத்தைக் கோலம் போடுங்கள் என்று தன் கட்சியினர்க்கு அறிவுரை கூறினார். இதனைக் கேட்டுப் பச்சைகுத்திக் கொண்டவர்கள், கட்சி விட்டுக் கட்சி தாவியபோது, அதனை அகற்ற முடியாமல் அல்லற்பட்டவர்கள், அறுவை மருத்துவம் செய்துகொண்டு அதனை அகற்றியவர்கள், அடையாளம் அழியாமல் ஏளனத்திற்குள்ளாகி வருந்தியவர்கள் என்று பல்வேறு துன்பங்களுக்கு ஆளான நண்பர்கள் பலரை இக் கட்டுரையாளர் நன்கு அறிவார். ஆனால் பெரியார் மக்களின் விடுதலைக் குரலை, உரிமைக் குரலைக் கையில் எழுதுங்கள், வீடுகள்தோறும் அதனை எழுதிப் பதிவு செய்யுங்கள் என்றார். பெரியார் ஒருவர் தாம் பெரியார்!

இவ்விடத்தில் பாரதியாரின் பாட்டொன்றையும் நாம் ஆய்வுக்கு உட்படுத்தலாம். செந்தமிழ் நாடெனும் போதினிலே... எனும் அந்தக் கும்மிப் பாட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய கவிதைப் போட்டிக்காக எழுதப்பட்டதாகும். ஆதலின் மக்களின் குரலைப் பாரதி எதிரொலித்தார் எனக் கொள்ளுதல் பொருந்தாது. தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்ற பெயரில்லையே என்று எள் முனையளவுகூடப் பாரதி வருந்தியதாகத் தெரியவில்லை. மேலும் அந்தப் பாடல் பல முரண்பாடுகளைக் கொண்டது. கல்வி சிறந்த தமிழ்நாடு என்னும் பாரதியின் கூற்று கலப்படமில்லாத பொய். அக்காலத்தில் கல்வி நிலை பற்றிப் பேராசிரியர் அறவாணன் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

அறவே எழுதவும் படிக்கவும் தெரியாத மக்கள் தமிழகத்தில் இருந்தனர். அரச குடும்பத்தில் பிறந்த அரசிளங்குமரன் கூடப் படிக்காது இருந்துள்ளான். காலந்தோறும் தமிழருடைய கல்வி அறிவு போதுமானதாக இல்லை. சுத்தமாக இல்லை. 1901இல் ஆங்கிலேயரால் எடுக்கப்பெற்ற முதல் மக்கள் தொகை அறிவிப்பின்படி தமிழருள் படித்தோர் தொகை ஒரு விழுக்காட்டிற்கும் குறைவுதான். 99 பேர் படிக்காமல் இருந்தனர்.[21]

ஈராயிரம் ஆண்டுகளாக எழுதப் படிக்கத் தெரியாதிருந்து விட்டுத் திடீரெனக் கல்வி சிறந்த தமிழ்நாடாக எப்படி மாறிற்று என்னும் கேள்வி இயல்பாக எழுகிறது. ஒரு வேளை அவர் வேதக் கல்வியை மனத்துள் கொண்டு பாடியிருக்கலாம். ஈராயிரம் ஆண்டுகளாக வேதக் கல்விதானே சிறந்திருந்தது! மேலும் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்பதும் சிக்கலுக்குரிய தொடர்தான். தென்திராவிட மக்களைக் குரங்குகள் என்றும் அரக்கர்கள் என்றும் கம்பன் கூறியிருப்பது தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை.

அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர் குரக்கினத்து அரசைக் கொல்ல மனுநெறி கூறிற்றுண்டோ! இரக்கம் எங்கு உகுத்தாய் என்பால் எப்பிழை கண்டாய்?[22]

என்று இராமனைப் பார்த்து வாலி கேட்பதாகக் கம்பர் பாடுவது நோக்கத்தக்கது.

1938 - டிசம்பர் மாதம் சென்னையில் நடந்த தென்னிந்தியர் நல உரிமைச் சங்க (நீதிக் கட்சி) மாநாட்டில் வாசிக்கப்பட்ட பெரியாரின் உரையிலும் தமிழ்நாடு தமிழருக்கே என்ற வாசகம் இடம் பெற்றிருந்தது. இதற்கு முதல்நாள் வேலூரில் நடந்த தமிழ் மாநாட்டில், தலைமை ஏற்று உரை நிகழ்த்திய சர். ஏ.டி.பன்னீர்செல்வம், தமிழ்நாடு தமிழருக்கே என்பதைப் பற்றி விளக்கி உரையாற்றியுள்ளார். இதனால் தமிழ்நாடு தமிழருக்கே என்னும் கொள்கை முழக்கம் இன்று தமிழ்நாடெங்கும் தமிழ் மக்களது இலட்சியக் குறிச்சொல்லாகத் தமிழ் மக்களால் ஒலிக்கப்படுகிறது.[23]

இது குறித்துப் பேராசிரியர் அன்பழகன் 1947இல் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:-

தமிழ்நாடு தமிழருக்கே என்ற குரல் இன்று பல திசைகளிலே கேட்கப் பட்டாலும், அதை முதலில் எழுப்பிய பெருமையும், எதிர்ப்புகளுக்கும் ஏளனங்களுக்குமிடையே வளர்த்த சிறப்பும், தமிழர் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களுக்கே உரியதாம். தோழர் இராஜகோபால ஆச்சாரியார், சென்னை மாகாண முதலமைச்சராக அமைந்து வடநாட்டு இந்தியை வலுக்கட்டாயமாகத் தமிழ்ச் சேய்களின் வாய்களிலே திணிக்க முயன்றபோது அந்தக் கொடுமையை எதிர்த்துத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் நடத்திய பெரியதொரு போராட்டத்தின் சிறந்ததொரு விளைவாகத் தமிழ்நாடு தமிழருக்கே என்ற உரிமையொலி அன்று எழுந்தது.[24]

தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தை எவருமே எதிர்க்கவில்லையா என்றால், எதிர்க்கத் துணிந்தவர்கள், ஏளனம் செய்தவர்கள் மிகச் சிறுபான்மையினராக இருந்தனர். தந்தை பெரியாரே இதைப் பற்றிக் கூறுகிறார்:-

தமிழ்நாடு தமிழருக்கே என்பதில் யாருக்காவது அதிருப்தியோ, அபிப்பிராய பேதமோ இருப்பதாக இதுவரையும் நமக்கு எவ்விதத் தகவலோ மறுப்போ வந்தது கிடையாது. பார்ப்பனப் பத்திரிகைகள் சிலவற்றிலும் அவர்களது கூலிகளது வாய்கள் சிலவற்றிலும் ஏதோ பொருத்தமற்ற கூப்பாடுகள் இரண்டொன்றைக் காணவும் கேட்கவும் நேர்ந்தது, என்றாலும் அதுவும் மறுமுறை கிளம்பினதாகத் தெரியவில்லை. ஒரு பார்ப்பனப் பத்திரிகை மாத்திரம் தமிழ்நாடு தமிழருக்கே என்றால் எலிவளை எலிகளுக்கே என்று எழுதிற்று.[25]

இவ்வாறு எலியைத் துணைக்கழைத்து ஏளனம் செய்தவர்களும் கேலிச் சித்திரம் தீட்டியவர்களும் சிலர் இருந்தனர். ஆனால், இந்த எதிர்ப்பு மறுமுறை தோன்றவில்லை என்பதைப் பெரியார் குறிப்பிட்டுக் கூறுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தண்டனை பெற்றுச் சிறை செல்வதற்கு முன்பாக 30.11.1938 அன்று சென்னையில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பெரியார் பேசுகிறார்:

1938ஆம் வருடத் தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டிற்குப் பிறகு சென்னை மாகாணம் - தமிழ்நாடு எனப் பெருமை பெற்றதென்றால் அது தமிழர்களின் ஒற்றுமையால் என்றிருக்க வேண்டும். மானத்தைக் கருதுங்கள்; சுயநலம், பெருமை பதவி ஆசை முதலியவைகளைக் கைவிடுங்கள்.[26]

பெரியாரின் பேருரையைக் கேட்க முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்தார்கள் என்று குடிஅரசு (11.12.1938) கூறுகிறது.

இதன் பின்னர் 21.11.1939 தொடங்கி 25.11.1939 வரை அய்ந்து நாள்கள் விடுதலை இதழில் தமிழ்நாடு தமிழருக்கே என்ற தலைப்பில் அய்ந்து தலையங்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றில், தமிழ்நாடு என்பதற்குத் திராவிட நாடு என்றுதான் பொருள்; இது தமிழ்நாடு பிரிவினையைக் கருத்தில் கொண்டு அல்ல என்றும், திராவிட மக்களின் நாகரிகம், பண்பாடு, கலை, தொழில், இலக்கியம் முதலானவை ஆரியர்களின் நாகரிகப் பண்பாடுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை என்றும் பல்வேறு சான்றுகளோடு பெரியார் விளக்குகிறார். 25.11.1939ஆம் நாள் எழுதப்பட்ட தலையங்கத்தின் முடிவில் தமிழ்நாடு தமிழருக்கே என்று மும்முறை முழக்கமிடப் பட்டிருக்கின்றது.[27]

1956இல் மொழிவாரியாக மாநிலங்கள் உருவாக்கப்பட்ட நேரத்தில் கூடத் தமிழ்மொழி

வழங்கும் மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் வைக்கப்படவில்லை. இதுபற்றிப் பெரியார்,

சுமார் 3 கோடித் தமிழர்கள் வாழும் நாட்டிற்கு அதிகாரப்பூர்வமாகத் தமிழ்நாடு என்ற பெயரில்லை; இராஜ்ய சீரமைப்புக் கமிசன் (State Re-organisation commission) அறிக்கை வெளிவந்தவுடன் நான் பதறிப் போய் பெயரிடுவது பற்றி 12.10.1955இல் விடுதலையில் அறிக்கை வெளியிட்டேன்[28] என்கிறார்.

மேலும் தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாமல் சென்னை நாடு என்ற பெயர் வைத்தால் நான் ஒருபோதும் அதைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டேன் என்றும் பெரியார் குமுறுகிறார்.

திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டை விட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்துபோன பின்புகூட மீதியுள்ள - யாருடைய ஆட்சேபணைக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் கூட இருக்கக் கூடாதென்று பார்ப்பானும் வடநாட்டானும் சூழ்ச்சி செய்து இப்போது அந்தப் பெயரையே மறைத்து, ஒழித்துப் பிரிவினையில் சென்னை நாடு என்று பெயர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழனும் அவன் எப்படிப்பட்ட தமிழன் ஆனாலும் இந்த அக்கிரமத்தைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக் கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாது, என்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைத் திருத்தத் தமிழ்நாட்டு மந்திரிகளையும் சென்னை, டில்லி, சட்டசபை, கீழ் மேல்சபை அங்கத்தினர்களையும் மிக மிக வணக்கத்தோடு இறைஞ்சி வேண்டிக் கொள்கிறேன்.[29]

மேலும் தமிழ்நாட்டில் உள்ள, புலவர்களையும், பிரபுக்களையும், அரசியல், சமுதாய இயல் கட்சிக்காரர்களையும் இதுபற்றி ஆராய்ந்து முயற்சி எடுக்கும்படி பெரியார் வேண்டுகோள் வைக்கிறார்.

தமிழ், தமிழ்நாடு என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்து வெற்றி பெற்றுவிட்டார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால், பிறகு என்னுடையவோ எனது கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்க வேண்டும்? என்று எனக்குத் தோன்றவில்லை.

தமிழ்நாடு என்று பெயர் வைக்காமல் சென்னை நாடு என்று பெயர் வைப்பது மிகப் பெரிய சூழ்ச்சி என்றும், கொடுமை என்றும், தமிழர்தம் நாடு, மொழி, இனப் பெயர்களை மறைத்து விடுவதென்றால் பிறகு தமிழர் எதற்காக உயிர்வாழ வேண்டும் என்றும் இக் கேட்டினை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்றும் தமிழ் மக்கள் அனைவரையும் வணங்கி வேண்டிக் கொள்கிறார் பெரியார்.[30]

அது மட்டுமல்லாது இந்த அறிக்கை வெளிவந்த 11.10.1955ஆம் நாளிட்ட விடுதலையின் இரண்டாம் பக்கத்தில் சென்னை ராஜ்யமல்ல; தமிழ்நாடு என்றே கூறுவோம் என்று பெரிய எழுத்தில் அச்சிட்டுக் காட்டியிருக்கிறார் பெரியார். மேலும் திராவிடம், திராவிடர் என்ற வரலாற்றுத் தொடர்பான பெயர்களும் தமிழ்நாடு, தமிழர் என்ற மொழிவழிப்பட்ட பெயர்களும் வடநாட்டுக்கோ வெளிநாடுகளுக்கோ தெரியாதபடி இருட்டடிக்கப் பட்டுவிட்டது என்றும் பெரியார் கருதுகிறார்.

அயர்லாண்டு, இங்கிலாண்டு, ஸ்விட்சர்லாண்டு, போலண்டு, ஜெர்மனி, ரஷ்யா, சீனா, பர்மா, மலேயா, துருக்கி, இத்தாலி, ஆப்பிரிக்கா, கிரீஸ், ஸ்பெயின், போர்ச்சுகல் போன்ற (கிட்டத்தட்ட) உலக நாடுகளெல்லாம் மொழியை அடிப்படையாகக் கொண்டே அழைக்கப்படும் போது, தமிழ் பேசப்படுகின்ற நாட்டைத் தமிழ்நாடு என்று அழைக்காமல் மெட்ராஸ் ஸ்டேட் என்றோ சென்னை நாடு என்றோ அழைப்பதற்குத் தமிழ் மக்கள் வெட்கப்பட வேண்டாமா? ஆட்சியாளர் ஆவன செய்ய வேண்டும். தமிழர்கள் இனிப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் தமிழ்நாடு என்றே வழங்கி வர வேண்டும். இயற்கையான இன உணர்ச்சி, மொழிப்பற்று இல்லாவிட்டாலும் மற்றவர்களைப் பார்த்தாவது திருந்தக் கூடாதா?

மற்ற நாடுகளைப் பார்த்தாவது மான உணர்ச்சி பெறக் கூடாதா?[31]

என்று பெரியார் எடுத்து வைக்கும் கருத்துரைகள் எவராலும் மறுக்க முடியாதவை!

இதனைத் தொடர்ந்து நடந்த மாநாடுகளில் எல்லாம் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற தீர்மானத்தைப் பெரியார் நிறைவேற்றியிருக்கிறார். இவ்வாறு இந்த மண்ணிற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்னும் கோரிக்கையைத் தமிழக வரலாற்றில் முதன்முதலில் முன்னெடுத்து முழங்கியவர் தந்தை பெரியார்தாம் என்பது தெளிவாகும். இத்தகைய பெரியாரைத் தமிழ்நாட்டிற்கு எதிரானவர் என்று காட்ட முயல்வது அறியாமை மட்டுமல்ல; அது மாபெரும் வரலாற்றுப் பிழையாகும்.

11.10.1955ஆம் நாளன்று விடுதலையில் பெரியார் விடுத்த அறிக்கையில், இரண்டு இடங்களில் வணங்கி வேண்டிக் கொள்கிறேன் என்று குறிப்பிடுகிறார். முதலாவதாக அதிகாரத்தில் இருப்பவர்களையும் இரண்டாவதாக எல்லாத் தமிழர்களையும் வணங்கித் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாறு அவர் வேண்டிக் கொள்கிறார். யாருக்கும் தலைவணங்காத பெரியார், தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்காக வணக்கத்தோடு இறைஞ்சி வேண்டிக் கொள்கிறேன் என்கிறார். இதனால் தமிழ்நாடு என்ற பெயர் தந்தை பெரியாரின் நெஞ்சம் கவர்ந்த சொல்லாட்சியாக நிலைத்துவிட்டது என்பதை அறிய முடிகிறது.

1930-முதற்கொண்டு வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் தமிழ்நாடு தமிழ்நாடு என்று பெரியார் பேசியும் எழுதியும் வந்துள்ளார்:-

தமிழ்நாட்டில் சங்கீத விஷயத்தில் தேர்ச்சியுள்ள பார்ப்பனரல்லாத வித்வான்கள் அனேகர் இருக்கிறார்கள். அதிலும் சங்கீத சம்பந்தமான பல கலைகளிலும் தமிழ் நாட்டிற்கே சிறந்தவர்கள், முதன்மையானவர்கள், இணையில்லாதவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதவர்களே யாவார்கள்...[32]

தமிழர்களே! உங்கள் உடலில் இருப்பது ஆரிய இரத்தக் கலப்பில்லாத தனித் தமிழர் இரத்தம் என்று கருதிக் கொள்ளுங்கள்; உடனே உங்களுக்குப் புதிய உணர்ச்சி வரும்; புதிய ஊக்கம் வரும்; உங்கள் அறிவு ஒளி பெற்று உங்கள் மனத்தில் படிந்துள்ள தும்பும் தூசியும் விலகி உங்கள் நரம்புகளுக்கும் நாடிகளுக்கும் முறுக்கு ஏறும். அப்பொழுதே நீங்கள் உண்மைத் தமிழராகி, தமிழ்நாடு தமிழருக்காகி, தமிழர் வாழ்வு மானமும் உயர்வும் பெறும் என்று பணிவோடு விண்ணப்பித்துக் கொள்கிறோம்.[33]

தமிழ்நாட்டு மக்களுக்கு மரியாதை வார்த்தைக்காக ஸ்ரீ என்கிற ஆரிய வார்த்தையை வைத்துத் தமிழை அலட்சியப்படுத்தித் தமிழ் மக்கள் மனத்தையும் காங்கிரஸ் ஆட்சியார் புண்படுத்தியிருப்பதால், அதை மாற்றித் திரு என்கிற வார்த்தையை சர்க்கார் உபயோகப்படுத்த வேண்டும் என்று இம்மாநாடு சர்க்காரை வேண்டிக் கொள்கிறது.[34]

தமிழ்நாடு எனப் பெயர் வைக்க வேண்டும். மொழிவழி ராஜ்யப் பிரிவினைக்குப் பின் அந்தந்த ராஜ்ய மக்களின் தாய்மொழியின் பெயரால் தங்களது ராஜ்யங்களுக்குப் பெயர் வைத்திருக்கும்போது, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழும் பகுதிக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்காமல் சென்னை-ராஜ்யம் என்று பெயர் வைத்திருப்பதைக் கண்டு வருந்துவதுடன் சென்னை ராஜ்யம் என்றிருப்பதை மாற்றி, தமிழ்நாடு எனப் பெயர் வைக்கும்படித் தமிழ்நாட்டு சர்க்காரை இம் மாபெரும் மாநாடு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறது.[35]

பெரியார் இத் தீர்மானத்தை விளக்கிப் பேசினார். (20.11.1956)

தமிழ்நாட்டின் பஞ்சப் பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தைச் செழிப்படையச் செய்ய மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே வீணாக ஓடிக் கொண்டிருக்கும் பம்பையாற்றுத் தண்ணீரை மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே திருப்பிவிடும் முயற்சியைத் தமிழ்நாடு ஆட்சியினர் மிக விரைவாகச் செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

இலங்கையிலிருந்து துரத்தப்படுகிற தமிழ் மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கும்படி தமிழ்நாடு ஆட்சியாளரையும் மத்திய ஆட்சியையும் இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.[36]

பண்டைக் காலத்தில் உலகமே கண்டு வியக்கும் பேரரசாக விளங்கிய தமிழ்த் திருநாடு... தமிழ்நாட்டுக்குள் இன்று, டில்லி இந்தியைத் திணித்து இருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழுக்குரிய இடங்களையெல்லாம் இந்தி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு 400 லட்சம் மக்களைக் கொண்டது.[37] (மன்னார்குடி மாநாட்டுத் தீர்மானங்கள்)

இன்று தமிழ்நாட்டில் சமஸ்கிருதம் என்ற ஒருமொழி உண்மையிலேயே தேவைதானா? எதற்காவது பயன்படுகிறதா?

தமிழ்நாட்டில் தமிழர்களின் வாழ்வில், சமயத்தில், சமுதாயத்தில், அரசியலில், விஞ்ஞானத்தில் மற்றும் ஏதாவது ஒரு காரியத்திற்கு இந்தச் சமஸ்கிருதம் பயன்படுகிறதா?[38]

தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பு - ஆதிக்கம் முழுவதும் தமிழர்களிடத்திலே இருக்க வேண்டும். தமிழர்கள் என்பது இங்கு தமிழ்நாட்டிலுள்ள ஆரியர் அல்லாத பார்ப்பனரல்லாதார் ஆகும்.[39]

இவ்வாறு காலந்தோறும் தமிழ்நாடு என்ற சொல்லாட்சியை மக்கள் உள்ளங்களில் விதைத்து அதனை வளர்த்தவர் பெரியார். மக்கள் வழக்காற்றில் தமிழ்நாடு எல்லோரும் பயன்படுத்தும் எளிய சொல்லாட்சியாக மலர்ந்துவிட்டது. மக்களைப் பக்குவப்படுத்திப் போர்க்குணம் உடையவர்களாக மாற்ற வேண்டும், தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கு நாளை ஒரு போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கு மக்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று பெரியார் கருதியிருக்க வேண்டும். மக்கள் உள்ளங்களில் நீறு பூத்த நெருப்பாகத் தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கை கனன்று கொண்டிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில்தான் விருதுநகரைச் சேர்ந்த சங்கரலிங்கனார் 1956ஆம் ஆண்டு தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கையை முன் வைத்து உண்ணாநிலைப் போராட்டத்தை மேற்கொண்டார். அவருடைய கோரிக்கையை காங்கிரசு அரசு ஏற்கவில்லை. சங்கரலிங்கனார் உயிர்நீத்தார். அவருடைய இறுதி ஊர்வலத்தில் பத்துப் பேருக்குமேல் வேறு எவரும் பங்கேற்கக் கூடாது என்று அரசு தடை விதித்தது. என்றாலும் அறிஞர் அண்ணாவின் வேண்டுகோளை ஏற்று, திராவிட இயக்கத் தோழர்களும் தமிழன்பர்களும் - ஏராளமானோர் கலந்து கொண்டு சங்கரலிங்கனாரின் ஈகத்தைப் போற்றி அவருக்கு வீரவணக்கம் செலுத்தினர்.[40]

இதுபற்றி ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிடுவதைக் காணலாம்: - சென்னை மாநிலம் என்ற பெயரை மாற்றித் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்று சங்கரலிங்கனார் போராடி உயிர் நீத்தார். அதற்கு முன் இருந்த காங்கிரசு அரசுகள் பிடிவாதமாகச் சென்னை என்று சொன்னால்தான் புரியும் என்று ஏதேதோ தவறான கருத்துகளைச் சொன்னார்கள். தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று முதன்முதலாக அறிக்கை விட்டவர் தந்தை பெரியார் அவர்கள். இது ரொம்பப் பேருக்குத் தெரியாது. சென்னை என்ற சொல்லின் பொருள் சரியானது அல்ல; அது தேவை இல்லை என்று தந்தை பெரியார் எடுத்துச் சொன்னார்.[41]

தந்தை பெரியாரின் தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கை, தமிழ்நாட்டிற்கு அப்பாலும் எதிரொலிக்கத் தொடங்கியது. டெல்லி மாநிலங்களவையில் பெரியாரின் குரலை அறிஞர் அண்ணா எடுத்து முழங்கினார். அறிஞர் அண்ணாவின் நெஞ்சில் நிறைந்தவர் பெரியார் என்பதை அவரே குறிப்பிடுவதைக் காணலாம்;

நானும் பெரியாரும் பிரிந்திருந்ததாகச் சொன்னார்கள்; அது தவறு; ஒருபோதும் நாங்கள் அப்படிப் பிரிந்திருக்கவில்லை; எப்பொழுதும் பெரியார் உள்ளத்திலே நான் இருப்பேன்; என்னுடைய உள்ளத்திலே அவர் இருப்பார்; ஆகவே யாரும் எங்களைப் பிரிக்க முடியாது.[42]

சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மாநிலங்களவையில் கொண்டுவந்து அதை முன்மொழிந்து பேசியவர் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் பூபேஷ் குப்தா ஆவார். அறிஞர் அண்ணா, 1963 மே மாதம் – அதனை வழிமொழிந்து மிக விளக்கமாகப் பேசினார். என்றாலும் காங்கிரசின் போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இதே கோரிக்கையை வலியுறுத்திப் பொதுவுடைமைக் கட்சியும் தி.மு.கழகமும் இணைந்து சென்னை – சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பும் செய்துள்ளன. 1964 – மார்ச் 9ஆம் நாள், சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு எனப் பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தித் தமிழ் அறிஞர் டாக்டர் அ.சிதம்பரநாதனார் பேசியிருக்கிறார். இது மக்களின் கோரிக்கையாக இருந்து வருவதால், இன்றைக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவில்லை என்றாலும் எதிர்காலத்தில் சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கத்தான் போகிறார்கள். அந்தப் பெருமையை இந்த அரசு ஏற்றுக் கொண்டால் என்ன? என்று சிதம்பரநாதனார் காங்கிரசு அரசை வற்புறுத்தியிருப்பதையும் காண முடிகிறது.[43]

மாநிலங்களவையில் தமிழ்நாட்டைப் பற்றிப் பேசியதோடு அண்ணா நின்றுவிடவில்லை. தமது எழுத்திலும் பேச்சிலும் தமிழ்நாடு எனும் சொல்லாட்சியைத் தவறாமல் பயன்படுத்தியிருப்பதைப் பார்க்க முடிகிறது. தமிழரின் மறுமலர்ச்சி என்ற ஒரு சிறு நூலில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்நாடு இடம் பெற்றிருக்கிறது. (எ.டு)[44]

தமிழனுக்குத் தமிழ்நாட்டிலே தமிழரின் பணத்தால் கட்டி, தமிழன் பணத்தால் பராமரிக்கப்படும் கோயில்களிலே தமிழருக்குச் சம உரிமை இல்லை.

தமிழ்நாட்டிலே தமிழருடைய மொழியிலே தகாத மொழிகள் கள்ளிபோல் படர்ந்துவிட்டன

தமிழ்நாட்டிலே தமிழனுக்கு வேலை கிடைப்பதில்லை (ப.31)

தமிழ்நாட்டிலே தமிழ்ப் பாடல் கிடையாது (ப.4)

தமிழ்நாட்டிலே தமிழே இருத்தல் வேண்டும். (ப.6)

தமிழ்நாட்டைப் போல் வேறு எந்த நாட்டிலும் அந்த நாட்டின் மொழியல்லாத வேற்று மொழியில் சங்கீதம் பாடுவதைக் கேட்க முடியாது. (ப.10)

தமிழ்நாட்டிலே தமிழ்ப் பாடல்களை வளர்க்க வேண்டும்; தமிழ்ப் பாடல்கள் பாடுவோருக்கு ஆதரவு தர வேண்டும்.(ப.14)

இவ்வாறு திருப்பிய பக்கமெல்லாம் தமிழ்நாடு என்ற சொல்லாட்சியைத் தமிழரின் மறுமலர்ச்சி என்ற நூலில் அறிஞர் அண்ணா தவழ விட்டிருக்கிறார்.

மதுரையிலும் பிற இடங்களிலும் கல்வி நிறுவனங்கள் பலவற்றைத் தொடங்கி நடத்தி வந்த ஆலை அதிபர் கருமுத்து தியாகராசர் இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்து வந்தார். இந்தி எதிர்ப்பிலும் தமிழ் இயக்கங்களின் வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டிய கருமுத்து தியாகராசர் தமிழின் மீது தணியாத பற்றுக் கொண்டவர். டாக்டர் மா.இராசமாணிக்கனார், டாக்டர் இலக்குவனார், அவ்வை சு.துரைசாமி, தமிழண்ணல், டாக்டர் அ.சிதம்பரநாதனார் முதலான தமிழறிஞர்களை விரும்பி அழைத்துத் தம் கல்லூரியில் பணியமர்த்திக் கொண்டவர். நல்ல தமிழில் செய்திகளை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற ஆசையால் 1960களில் தமிழ்நாடு என்ற நாளேட்டை, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கி நடத்தி வந்தார். சில ஆண்டுகளிலேயே, அதனால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய முடியாமல் போனதால் தமிழ்நாடு என்ற அந்த நாளேடு நிறுத்தப்பட்டுவிட்டது. திராவிடர் இயக்கத்தின் தாக்கத்தால் உருவான அந்த நாளேடு நின்றுபோனது வருந்துவதற்கு உரியதாகும்.

இவ்வாறு தமிழ்நாடு என்பதை மக்கள் உள்ளங்களில் பதிய வைத்து அதனைக் காத்து வளர்த்தது திராவிடர் இயக்கம். சென்னை மாநிலம் **(MADRAS STATE)** என்பது அதிகாரப்பூர்வமான பெயராக இருந்தபோதிலும் அந்தப் பெயர் மக்கள் வழக்காற்றில் இல்லை. தமிழ்நாடு என்பதே மக்களின் பேச்சுவழக்கில் நிலைகொண்டிருந்தது.

அது இயல்பானதாக, இயற்கையானதாக அமைந்திருந்தது.

1920களின் பிற்பகுதியில் தொடங்கித் தமிழ்நாடு என்ற பெயரை இடைவிடாமல் மக்களிடம் கொண்டு சேர்த்த பெரியார், அது மக்களிடம் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுவிட்டது என்பதை 1960இல் விடுதலையில் வெளியிட்ட அறிக்கையில் தெளிவாக்குகிறார். ஆனால், தமிழ்நாடு என்று பெயர் வைக்கின்ற அதிகாரம், டெல்லி அரசிடம் குவிந்து கிடக்கிறது. இந்த அதிகார மய்யத்திலிருந்து அந்த உரிமையை நாம் பெற்றாலன்றித் தமிழ்நாடு என்ற பெயர் வைப்பது கடினம் என்பதை அரசியல் கட்சிகளுக்கு அவர் எடுத்துரைத்தார். அப்போது காமராசர் முதலமைச்சராக இருந்தார். இக் கோரிக்கையை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு காமராசர் ஆட்சிக்கு எதிராக எதிர்க் கட்சிகள் கிளர்ச்சி செய்வதைப் பெரியார் விரும்பவில்லை.

இதற்காகத் தமிழ்நாட்டு அரசாங்கத்தோடு முட்டிக் கொள்ளுவதைவிட, இந்த அநீதிக்குக் காரணமான ஆதிபத்திய டெல்லி ஆட்சியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதுதானே அறிவுடைமை!

எனவே, தாய்த் திருநாட்டிற்குத் தமிழ்நாடு என்ற பெயரில்லையே என்று கொதிக்கும் உள்ளங்கொண்ட இளைஞர்களே! தோழர்களே! புலவர்களே! பெருமக்களே! எழுத்தாளர்களே! பேச்சாளர்களே![45]

என்று எல்லோரையும் மாநில உரிமை மீட்புப் போருக்குப் பெரியார் அழைக்கிறார். தமிழ்நாட்டைத் தமிழ்த்திருநாடு என்றும், தாய்த்திருநாடு என்றும் பெரியார் உணர்ச்சி பொங்கிடக் குறிப்பிடுவதை ஆய்வாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சங்கரலிங்கனார் காந்தியடிகளின் அறப் போராட்டங்களில் பங்கு கொண்டவர். அப்படியிருந்தும், சொந்தக் கட்சிக்காரரின் கோரிக்கை ஏன் ஏற்கப்படவில்லை? அது ஒரு தனி மனிதர் நடத்திய போராட்டம் என்பதாலா? சங்கரலிங்கனாரின் ஏனைய கோரிக்கைகள் யாவை? இவற்றிற்கு வரலாற்று ஆய்வாளர்கள் விடை காண வேண்டும்.

சங்கரலிங்கனாரின் கோரிக்கைகள் இருபத்து நான்கு என்கிறார்கள். அவற்றுள் முதலாவது கோரிக்கை தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கை. இருபத்து நான்கு கோரிக்கைகளில் அவர் இந்தியை ஆதரித்து ஒரு கோரிக்கை வைத்திருந்ததாகக் காலஞ்சென்ற பேராசிரியர் பு.இராசதுரை ஒருமுறை குறிப்பிட்டது நம் நினைவில் இருக்கிறது. அந்தக் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கை தம்மிடம் இருப்பதாகவும் பேராசிரியர் இராசதுரை கூறியிருக்கிறார். பேரா. இராசதுரையின் ஆவணக் காப்பகத்தை அலசிப் பார்த்தால் அந்த அறிக்கை கிடைக்கக் கூடும். சங்கரலிங்கனாரின் 24 கோரிக்கைகள் அடங்கிய அந்த அறிக்கை கிடைத்தால் காங்கிரசின் பிடிவாதப் போக்கிற்கு ஒருவேளை விடை கிடைக்கலாம்.

எனினும் சங்கரலிங்கனாரின் தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்டம் குறிப்பிடத்தகுந்த ஒன்றுதான். அவருடைய உயிர் ஈகத்திற்கு வரலாறு வணக்கம் செலுத்தும்.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, எவரும் சிந்தித்துப் பார்க்காத காலத்திலிருந்தே பெரியார் தமிழ்நாடு என்ற பெயரைப் பட்டி தொட்டியெல்லாம் பரப்பி வந்தார். அரசிதழில், அதிகார ஆவணங்களில் தமிழ்நாடு என்ற பெயர் (1967 வரை) இல்லையென்றாலும் பெரியார், தாம் போகும் இடமெல்லாம் தமிழ்நாடு, தமிழ்நாடு என்று முழங்கிக் கல்வியறிவில்லாக் கடைக்கோடி மக்களின் உதடுகளும் உச்சரிக்கும் பெயராகத் தமிழ்நாடு என்ற பெயரைக் கொண்டுபோய்ச் சேர்த்த பெருமை பெரியாரையே சார்ந்து நிற்கிறது. எனவே, தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று முதன்முதலில் குரல் கொடுத்தவரும் தொடர்ந்து அதனை வலியுறுத்தி எழுதி வந்தவரும் பேசிவந்தவரும் பெரியாரே என்பது புலனாகின்றது.

சொந்தக் கட்சிக்காரர் (சங்கரலிங்கனார்) சொன்னாலும் கேட்க மாட்டோம்; தமிழறிஞர்கள் சொன்னாலும் கேட்க மாட்டோம்; ஏன், பெரியாரே சொன்னாலும் கேட்க மாட்டோம் என்று பேராயக்

கட்சி அரசு கடைசி வரை, தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு முரண்பட்டு முற்றுப் பெற்று விட்டது. காங்கிரசின் இந்தப் பிடிவாதம் தமிழக அரசியலில் ஒரு திருப்புமுனையைத் தோற்றுவித்து விட்டது. 1967இல் அறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆனார். 1967 ஜூலை 18ஆம் நாள் சட்டப் பேரவையில், தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் தீர்மானத்தை அறிஞர் அண்ணா கொண்டு வந்தார். மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரைத் தமிழ்நாடு என்று தமிழில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட தீர்மானம் எவர் எதிர்ப்புமின்றி நிறைவேறியது. அப்போது உரையாற்றிய அண்ணா,

இந்த வெற்றி தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் வரலாற்றுக்கும், தமிழ்நாட்டுக்கும் கிடைத்த வெற்றி என்ற விதத்தில் நாம் அனைவரும் இந்த வெற்றியில் பங்குகொள்ள வேண்டும் என்றார்.

அதன் பின்னர் அண்ணா, தமிழ்நாடு என்று உரத்த குரலில் முழக்கமிட, அவை உறுப்பினர்கள் அனைவரும் (காங்கிரசு உறுப்பினர்கள் உட்பட) எழுந்து நின்று வாழ்க! என்று முழங்கினர். இந்த நிகழ்வு மூன்று முறை (தமிழ்நாடு வாழ்க - என்ற முழக்கம்) நடந்தது. 1968ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் தேதியன்று நாடாளுமன்றத்திலும் இத்தீர்மானம் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.[46]

தமிழ்நாடு அரசு – தலைமைச் செயலகம் என்னும் புதிய பெயர்ப்பலகை வைக்கப்பட்டது. சத்யமேவ ஜெயதே அகற்றப்பட்டு வாய்மையே வெல்லும் என்னும் வாசகம் பொறிக்கப்பட்டது. 1968 டிசம்பர் முதல் நாள் தமிழ்நாடெங்கும் பெயர் மாற்ற வெற்றி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சென்னையில் கலைவாணர் அரங்கில் (அப்போது அதன் பெயர் பாலர் அரங்கம்) நடைபெற்ற விழாவில் அண்ணா கலந்து கொண்டு உருக்கமான உரையாற்றினார். அமெரிக்காவில் மருத்துவம் பார்த்துக் கொண்டு சென்னை திரும்பிய அண்ணா அடையாறு மருத்துவமனையிலிருந்து நேரடியாக விழா அரங்கிற்கு, வந்து சேர்ந்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த விழாவில் உரையாற்றிய அண்ணா, என்னுடைய தாய்த்திரு நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டக் கூடிய இந்த நேரத்திலே இந்த விழாவிலே கலந்துகொள்ள வேண்டாம், என்று மருத்துவர்கள் என்னைத் தடுத்து ஓய்வெடுக்க வேண்டும், போக வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், என்னுடைய தாய்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டக்கூடிய இந்த விழாவிற்கு நான் வராமல் இருப்பதை விடக் கொடுமை வேறு இருக்க முடியாது. இந்த விழாவிற்கு வராமல் இருந்து, இந்த உடல் இருந்து என்ன பயன்? இத்தகைய வாய்ப்பு வாழ்க்கையில் ஒருமுறைதான் வரும்; பலமுறை வருவதில்லை. பெற வேண்டும் என்று நினைத்ததைப் பெற்றிருக்கிறோம். அடைய வேண்டியதை நாம் அடைந்திருக்கிறோம்[47] என்று உணர்ச்சி பொங்க உரையாற்றினார்.

தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய வெற்றி விழா நிகழ்ச்சிகள் முடிந்த நிலையில் தந்தை பெரியார் 6.12.1968ஆம் நாள் விடுதலையில் ஒரு நீண்ட அறிக்கையைத் தமிழ்நாடு பெயர் மாற்றம் என்ற தலைப்பில் வெளியிடுகிறார். இதுவரை பெயர் மாற்றக் கோரிக்கை ஏன் நிறைவேறவில்லை, தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதால் தமிழர்கள் பெறும் பயன் யாது? இனி அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அந்த அறிக்கையில் பெரியார் விரிவாக விளக்குகிறார்.

இதுவரையில் தமிழர்களின் பிரதிநிதியாக எவரும் தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்கின்ற பெயர் இருக்க வேண்டுமென்று கேட்கவே இல்லையே!

ஒரு சங்கரலிங்கம் கேட்டார் என்றால் அவர் ஓர் அனாமதேயமாவார். தமிழ் மக்களுக்காகக் கேட்கிறேன் என்பதற்கு அவருக்கு என்ன உரிமை இருந்தது? அவர் ஒரு தமிழர் என்பதாலேயே அவர் கேட்பதெல்லாம் கிடைத்தாக வேண்டுமா? அல்லது பட்டினி கிடந்ததாலேயே பட்டினியாளர் கேட்டதெல்லாம் கொடுக்கப்பட்டு ஆக வேண்டுமா? அதுதான் நீதியென்றால் தனிப்பட்ட மனிதன் கேட்பதையும் பட்டினி கிடப்பவன் கேட்பதையும் கொடுக்க எல்லோராலும் முடியுமா? அல்லது அவர் பட்டினிக்குச் சக்தி இல்லையா என்றால் அவருக்கு ஆதரவாக அவருக்குப் பின்னால் யார் இருந்தார்கள்?

அப்படித்தானே தமிழரசுக் கட்சி என்பதும் மற்றும் பல கட்சிகள் என்பதுமாகும்? கேட்டவர்கள் மறுக்கப்பட்டதை முன்னிறுத்தி என்ன கிளர்ச்சி செய்தார்கள்? அவர்கள் கிளர்ச்சிக்கு மக்களிடம் என்ன ஆதரவு இருந்தது? பட்டினிகிடந்து செத்தார். மக்கள் கருமாதி செய்துவிட்டு சாவின் பலனை முடித்துக்கொண்டார்கள்; அவ்வளவுதானே!

இதனால் ம.பொ.சி.யின் தமிழரசுக் கட்சியும் சி.பா.ஆதித்தனாரின் நாம் தமிழர் கட்சியும் பெயர் மாற்றக் கோரிக்கையைப் பிற்காலத்தில் வைத்தன; என்றாலும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை என்பது தெளிவாகிறது. ஏனென்றால் இவர்களுக்கு மக்களின் ஆதரவு இல்லாமற் போயிற்று. அதே நேரத்தில் பொட்டி சிறீராமுலுவின் தனி மாநிலக் கோரிக்கை வெற்றி பெற்றது எப்படி என்பதைப் பெரியார் விளக்குகிறார்.

ஆந்திர நாட்டைத் தனி மாநிலமாகப் பிரிக்க வேண்டுமென்று பொட்டி சிறீ ராமுலு என்பவர் பட்டினி கிடந்து உயிர்விட்டார். அதனால், ஆந்திர மாநிலத்தைத் தனியாகப் பிரித்தார்களென்றால் அவர் செத்த அன்றே அவருக்குப் பின்னிருந்த லட்சக்கணக்கான மக்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். நாட்டைப் பிரிக்காமல் அரசாங்கத்தை நடத்தக் கூடாது என்று பெருங்கிளர்ச்சியினைச் செய்தார்கள். அதனால் பிரிக்க வேண்டிய அவசியமேற்பட்டது. அந்தப்படி இங்கு கேட்டவர்கள் எவருக்கும் அதுபோன்ற மக்களின் பலம் பின்னணியில் இல்லையே! மக்களுக்கும் அந்த உணர்ச்சி இருக்கவில்லையே!

அண்ணா கேட்டார் என்றால் முன்னவரைப் போல வெறும் அண்ணாவாக இருந்து கேட்கவில்லையே! தமிழ்நாட்டின் நான்கு கோடி மக்களின் பிரதிநிதி என்கின்ற தன்மையிலும் தனக்குப் பின்னால் பலமான ஆதரவு இருக்கின்றது என்கின்ற தன்மையிலும் இருந்தல்லவா கேட்டார்!

ஆதலின் மக்களின் ஆதரவோடு தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கையை முன் வைத்திருந்தால் இதற்கு முன்னரேகூட வெற்றி பெற்றிருக்க முடியும் என்று பெரியார் கருதுகிறார். ஆனால், காங்கிரசு ஆட்சியில் பார்ப்பனரின் ஆதிக்கமும் சூழ்ச்சியும் அதிகம் இருந்தமையால் இது நடைபெற முடியாமற் போயிற்று என்று பெரியார் கருதுகிறார்.

மேலும் தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்ற கோரிக்கை வெற்றி பெற்றதற்கு அண்ணாவின் ஆட்சிதான் காரணம் என்கிறார் பெரியார்.

இதுபோல்தான் தனித் தமிழ்நாடு அண்ணா கேட்டால் கொடுத்தாக வேண்டிவரும். அப்படிக் கேட்டுவிடுவார்கள் என்று பயந்துதானே பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசு ஆட்சி சட்டசபைக்கு நிற்கிறவர்களிடம் நான் தனித் தமிழ்நாடு (பிரிவினை) கேட்பதில்லை என்று பிரமாணம் வாங்கிக் கொண்டு அதன்பின்தான் போட்டியிட அனுமதி வழங்குகின்றது. இப்படிப் பிரமாணம் செய்து வெற்றி பெற்றுப் பதவியில் உட்காரும்போதும் பிரமாணம் வாங்கிக் கொண்டுதான் பதவியில் உட்கார வைக்கின்றது. அதனால் தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்ற பிரச்சினை வெற்றி பெற்றதற்குக் காரணம் அண்ணாவின் ஆட்சிதான் என்று கூறுகிறேன்.

காலமெல்லாம் தமிழ்நாடு, தமிழ்நாடு என்று முழங்கிய பெரியார், மக்கள் நெஞ்சில் தமிழ்நாட்டை நிலைநிறுத்திய பெரியார், எவரும் நினைத்துப் பார்க்க முடியாத நெடுங்காலத்திற்கு முன்பே தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முதன்முதலாக எழுப்பிய பெரியார், தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கை வெற்றி பெற்றதற்கு அண்ணாவே காரணம் என்று குறிப்பிடுகிறார். இந்த அறிக்கையில் எந்த இடத்திலும் பெரியார், தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்ளும் ஒரு சொல்லைக் கூடக் காண முடியவில்லை. தன்னடக்கத்தோடு தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கு அண்ணாவின் ஆட்சிதான் காரணம் என்கிறார் பெரியார்.

தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டதனாலேயே நாம் மகிழ்ச்சியடைந்து விட முடியுமா? தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தும் பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்தும் டில்லி அரசின் பிடியில் இருக்கும்போது நாம்

மகிழ்ச்சியடைவது எப்படி? என்று கேட்கிறார் பெரியார்:

உலகில் வேறெங்கும் இல்லாத ஆதிக்கம், எனக்கும் உனக்கும் (டில்லிக்கும்) தூரம் 2000 மைல்; உலகத்தில் தமிழ்நாட்டைவிட இந்த அடிமைத்தனம் - பரதேசித்தனம் வேறு எங்கு இருக்கிறது? 50 கோடி மக்களை (1968இல்) அடக்கி ஆளும் ஆட்சி உலகில் எங்கு நடக்கிறது? 100க்கணக்கான மொழிபேசும் மக்களை ஒரு மொழிக்காரன் அடக்கி ஆளும் ஆட்சி உலகில் எங்கு நடக்கிறது?[48] என்று வினவுகிறார் பெரியார். இதுகாறும் கூறியவற்றால் கீழ்க்காணும் முடிவுகள் பெறப்படுகின்றன:

(1). தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி என்ற பெயர், அந்த இயக்கத்தினர் விரும்பி வைத்துக் கொண்ட பெயர் அல்ல; மாறாக, கர்நாடக, கேரள, ஆந்திரக் காங்கிரசு கமிட்டிகள் என்று தனித்தனியே உருவாகிவிட்ட நிலையில் வேறு வழியின்றி அந்த இயக்கத்தினர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்ற பெயரை ஏற்றுக் கொண்டார்கள்.

(2). 1967ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு காங். கமிட்டி, தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

(3). தமிழ்நாடு என்ற பெயரை 1926-1927 முதற்கொண்டு பெரியார் பயன்படுத்தி வந்துள்ளார். வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் தமிழ்நாடு என்ற பெயரை எடுத்துப் பேசியும் எழுதியும், அப் பெயரை மக்கள் நெஞ்சில் இடம் பெறச் செய்தவர் பெரியார் என்பதைத் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

(4). 1937-38இல் தமிழ்நாட்டுப் பள்ளியில் இந்தி கட்டாயப் படமாக்கப்பட்டது. இந்தியை ஒரு மொழி என்பதனால் பெரியார் எதிர்க்கவில்லை. அது ஒரு பண்பாட்டுப் படையெடுப்பு என்பதைத் தெளிவாக்கி அதனை முறியடிக்க வேண்டுமென்று தீவிரமாகப் போராடினார். இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்த மெரீனா கடற்கரையில் நடந்த இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு தமிழருக்கே என்று பெரியார் முழங்கினார். கூடியிருந்த மக்களையும் முழக்கமிடச் செய்தார்.

(5). தமிழ்நாடு என்ற பெயரை ஒவ்வொரு தமிழனும் தன் கையில் பச்சை குத்திக் கொள்ள வேண்டும்; வீட்டு முற்றத்தில் தமிழ்நாடு தமிழருக்கே என்ற பெயர்ப் பலகையை வைக்க வேண்டும் என்று தன் தோழர்களுக்குப் பெரியார் கட்டளையிட்டது வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்துவிட்டது.

(6). தந்தை பெரியாரைத் தொடர்ந்து அவருடைய தளபதியாகத் திகழ்ந்த அறிஞர் அண்ணா அவர்களும் தமிழ்நாடு, தமிழ்நாடு என்று முழங்கி வந்தார். நாடாளுமன்றத்திலும் அண்ணா தமிழ்நாடு எனப் பெயரிட வேண்டுமென்று வற்புறுத்தி உரையாற்றி வந்திருக்கிறார்.

(7). தமிழ்நாடு தன் தாய்நாடு என்பதை உணர்த்தும் வகையில் தாய்த்திருநாடு என்றும் தமிழ்த்திருநாடு என்றும் கூறி மகிழ்ந்தவர் பெரியார். இதனால் தமிழ்நாடு என்ற பெயரைப் பெரியார் நெஞ்சம் நிறைய நேசித்திருக்கிறார் என்பது தெளிவாகும்.

(8). தமிழ்நாட்டிற்குச் சென்னை நாடு என்று பெயர் வைப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது, தம்மால் அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்தவர் பெரியார்.

(9). சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று முதன்முதலில் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் என்பது தரவுகளிலிருந்து தெளிவாகப் புலனாகின்றது.

(10). பெரியார், தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கையை முன்னெடுத்து முழங்கி வந்த காலத்திற்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து விருதுநகர் சங்கரலிங்கனார், தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கையுடன் இருபதுக்கும் மேற்பட்ட கோரிக்கைகளோடு

தனி ஆளாகப் பட்டினிப் போர் நடத்தி உயிர் நீத்தார். பிற்காலத்தில் ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகமும் சி.பா.ஆதித்தனாரின் நாம் தமிழர் இயக்கமும் இதே கோரிக்கையை முன்வைத்தன. ஆனால், இவர்களுக்கு ஆதரவாக - பின்புலமாக மக்கள் இல்லாமற் போனமையால் இவர்களின் குரல் எடுபடவில்லை.

(11). ஆனால், ஆந்திர மாநிலக் கோரிக்கையை வலியுறுத்திப் பொட்டி சிறீராமுலு பட்டினிப் போர் நடத்தி உயிர் விட்டார். அவருக்கு ஆந்திர மக்களின் ஆதரவு இருந்தது, ஆந்திர மாநிலம் உருவாயிற்று. இதனால் மக்கள் ஆதரவு இல்லாமல் எந்தக் கோரிக்கையும் வெற்றி பெறாது என்பதைப் பெரியார் எடுத்துக் காட்டினார்.

(12). 1967இல் அறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்தார்; சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார். இது அண்ணாவால்தான் முடிந்தது என்றார் பெரியார். ஏனெனில், அண்ணாவுக்கு மக்களின் ஆதரவு இருந்தது. அவருக்குப் பின்புலமாக லட்சக்கணக்கான தொண்டர்கள் இருந்தார்கள்; அதனால் அண்ணாவுக்கு இந்த வேலை எளிதாக முடிந்தது. தமிழ்நாடு பெயர் மாற்றம் ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தாலும் மறுபுறம், உரிமைகளில்லையே என்று பெரியார் வருந்தினார். உரிமைகளற்ற ஒரு நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதனால் எப்பயனும் விளைந்துவிடப் போவதில்லை; தன்னாட்சி உரிமை பெற்ற தமிழ்நாடாக விளங்கும் நிலையில்தான் தமிழ்நாடு என்ற பெயர், பொருள் நிறைந்த பெயராகத் திகழும் என்பது பெரியார் முடிபாகும்.

இவ்வாறு தமிழ்நாட்டிற்காகவும், தமிழ்ப் பண்பாட்டிற்காகவும் தம் வாழ்நாளெல்லாம் போராடி வந்த பெரியாரை அயல்மொழிக்காரர் என்பது திரிபுவாதம்; மாபெரும் வரலாற்றுப் பிழை! அவர் தமிழர் இல்லையென்றால் வேறு யார்தாம் தமிழர்?

**அடிக்குறிப்புகள்:**


1. K.NAMBI AROORAN - Tamil Renaissance And Dravidian Nationalism 1905-1944 P.233 (1980)
2. பேரறிஞர் அண்ணா - பேரறிஞர் அண்ணா ; ப.4. தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை வெளியீடு, (2017)
3. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் - பாரதிதாசன் கவிதைகள்- ப.174 - பாரி நிலையம்-19704.
4. பேராசிரியர் ப.காளிமுத்து - விடுதலை தந்தை பெரியார் 138ஆம் ஆண்டு பிறந்த நாள் மலர்; ப.76,.
5. முரசொலி மாறன் - திராவிட இயக்க வரலாறு, பக்.15-166
6. தந்தை பெரியார் - குடிஅரசு, 06.03.1927.
7. பனம்பாரனார் - தொல்காப்பியப் பாயிரம்.
8. தொல்காப்பியர் - தொல்காப்பியம், செய்-நூ.75
9. மேலது. - தொல். புறத்திணை இயல், நூ.5
10. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் - புறநானூறு-168.
11. குமட்டூர்க் கண்ணனார் - பதிற்றுப் பத்து - இரண்டாம் பத்து பதிகம்.
12. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், கட்டுரை காதை.
13. மேலது. - சிலப்பதிகாரம், வஞ்சிக் காண்டம், காட்சிக் காதை.
14. மேலது. - சிலப்பதிகாரம், வாழ்த்துக் காதை, உரைப்பாட்டு மடை.
15. பேராசிரியர் ப.காளிமுத்து - மு.நூ. ப.77.
16. K.NAMBI AROORAN - மு.நூ. ப.236.
17. மேலது; - மு.நூ. ப.239.
18. கி.வீரமணி - பெரியாரியல் இராமாயண ஆய்வுச் சொற்பொழிவுகள், பக். 3-4
19. சாமி.சிதம்பரனார் - தமிழர் தலைவர், ப.140
20. தந்தை பெரியார் - குடிஅரசு, 23.10.1938
21. க.ப.அறவாணன் - தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு? ப.156.

22. கம்பர் - கம்பராமாயணம், வாலிவதைப் படலம்.

23. தந்தை பெரியார் - தமிழர், தமிழ்நாடு, தமிழர் பண்பாடு; ப.14.

24. க.அன்பழகன் - வாழ்க திராவிடம், ப.9; (2017)

25. தந்தை பெரியார் - மே.நூ. ப.15, (2011)

26. கி.வீரமணி - தந்தை பெரியாரின் லட்சிய முழக்கங்கள், ப.19, (2011)

27. தந்தை பெரியார் - மே.நூ. ப.49; (2011)

28. தந்தை பெரியார் - விடுதலை; 18.5.1960

29. தந்தை பெரியார் - விடுதலை; 11.10.1955

30. தந்தை பெரியார் - குடிஅரசு; தலையங்கம் - 20.4.1930

31. கி.வீரமணி - தமிழுக்கு என்ன செய்தார் பெரியார்? ப.226.

32. கி.வீரமணி (தொ.ஆ) - பெரியார் கொட்டிய போர் முரசு; ப.84.

33. மேலது - மே.நூ. ப.92.

34. மேலது - மே.நூ.ப.91

35. மேலது. - மே.நூ.ப.79.

36. தந்தை பெரியார் - விடுதலை; 15.2.1960.

37. கி.வீரமணி (தொ.ஆ) - பெரியார் கொட்டிய போர் முரசு; ப.91.

38. தந்தை பெரியார் - விடுதலை; 15.2.1960.

39. தந்தை பெரியார் - விடுதலை; 7.1.1962.

40. சுப.வீரபாண்டியன் - திராவிடம் வளர்த்த தமிழ், பக்.15-16.

41. கி.வீரமணி - அறிஞர் அண்ணா; ப.60.

42. கி.வீரமணி - ஈரோடும் காஞ்சியும்; ப.3.

43. டாக்டர் ம.பெ.சீனிவாசன் - நெய்தல் ஆய்வு; மலர்-3; இதழ்-1. ஜனவரி-ஏப்ரல்; 2018.

44. அறிஞர் அண்ணா - தமிழரின் மறுமலர்ச்சி; (2008) திராவிடர் கழக வெளியீடு.

45. தந்தை பெரியார் - விடுதலை - 18.05.1960.

46. கி.வீரமணி - திராவிடர் கழக வரலாறு; தொகுதி-1; ப.340.

47. சு.சண்முகசுந்தரம் - அறிஞர் அண்ணா, ப.16 (சாகித்திய அக்காதெமி வெளியீடு)

48. தந்தை பெரியார் - விடுதலை, 6.12.1968.

**ஆசிரியர்குறிப்பு:**

பேராசிரியர் காளிமுத்து பழனிக் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மொழிப்போர் வீரர். தமிழும் ஆங்கிலமும் துறை போகியவர். சங்கத்தமிழின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். பல ஆய்வுக் கட்டுரைகளின் ஆசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் விளங்குகிறார். நெருக்கடிநிலைக் காலத்தில் தம் பேராசிரியர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு பழிவாங்கப்பட்டவர்.

அய்யா காளிமுத்து, திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் செயற்குழு உறுப்பினர். 1970-இல் பகுத்தறிவாளர் கழகம் தொடங்கப்பட்ட போது அதன் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். 'குறிப்புப்பொருள் கோட்பாடுகள்' என்பது இவரது முதல் நூலாகும். மனு ஸ்மிருதி சாத்திரத்தை ஆய்வு செய்து 'மனுநீதி -ஒரு மறுபார்வை' என்ற நூலை எழுதியவர். '3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தியா', 'உலகத் தத்துவச் சிந்தனையாளர்களும் தந்தை பெரியாரும் - ஓர் ஒப்பியல் ஆய்வு', 'சிவாஜி முடிசூட்டலும் பார்ப்பனீயமும்' போன்ற நூல்களையும், 'மாட்டுக்கறியும் மதவெறியும்', 'காந்தியார் படுகொலை: அதிர்ச்சியூட்டும் தகவல்' போன்ற நூல்களின் முக்கியப் பகுதிகளையும் தமிழில் மொழிபெயர்த்தவர்.

♦